நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
21 DEC 2009
சேப்பாக்கம், சென்னை-5

சுருக்கம்

பணியமைப்பு– மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் செயற்படுத்தப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்திற்காக (JNNURM) ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு காலநீட்டிப்பு மற்றும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க அனுமதி வழங்கல்– ஆணைகள்– வெளியிடப்படுகின்றன

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை

அரசாணை (2டி) எண்: 129

நாள்: 18–12–2009
திருவள்ளுவராண்டு 2040, மார்கழி 3.

படிக்கப்பட்டது

1. அரசாணை (1டி) எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்: 18–01–2007
2. அரசாணை (2டி) எண்.105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி2) துறை, நாள்: 26–06–2007
3. ஆணையர், மதுரை மாநகராட்சி கடித எண்.மநி.1/18107/2006 நாள் 9–7–2009
4. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி கடித எண். 10906/2008/ஜேஎன்.2 நாள் 22–07–2009
5. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் எண்.69391/2007/ஜே.என்.என்.1, நாள் : 28–07–2009
6. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் எண்.69391/2007/ஜே.என்.என்.1, நாள் : 28–08–2009

ஆணை:-

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் JNNURM திட்ட செயலாக்கத்தினை கண்காணிக்கவும் செயல்படுத்தவும் (Project Implementation Unit) நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு ரூ.18.31 லட்சம் செலவினத்தில் 9 பணியிடங்களும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.95.39 லட்சம் செலவினத்தில் 52 பணியிடங்களும் இரண்டாண்டுகளுக்கு ஒப்பளிக்கப்பட்டன. நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி (Approval of the Project Implementation Unit by the Central Sanctioning and Monitoring Committee) தமிழ்நாடு நகர்புர வளர்ச்சித் திட்டம்–III (TNUDP-III)-லிருந்து மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் மத்திய அரசால் வழங்கப்படும் JNNURM மற்றும் நிர்வாகம் மற்றும் மற்ற செலவினங்களின் நிதிப் பங்கீட்டில் ஈடு செய்யலாம் எனவும் மத்திய அரசின் நிதி பெறப்படும்வரை முதலில் அம்மாநகராட்சிகளின் பொது நிதியிலிருந்து இச்செலவினத்தை ஈடு செய்யலாம் எனவும் ஆணையிடப்பட்டது. ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் இரண்டு வருட காலக்கெடு 25–06–2009 அன்று முடிவுற்றது.

...2

2. மத்திய அரசு மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு திட்ட செயலாக்க குழுவிற்கும் (Project Implementation Unit) கீழ்கண்ட 8 பணியிடங்களுக்கு மட்டுமே ஒப்புதல் வழங்கியது:-

1. Information and Technology Officer
2. Municipal Finance Officer
3. Public Health Engineer
4. Social Development Officer
5. Urban Planning Officer
6. Procurement Officer
7. Environment Officer
8. Human Resource Development Officer.

மேலும் மேற்குறிப்பிட்ட திட்ட செயலாக்க குழுவிற்கு முதலாண்டு ரூ.26.50 லட்சமும், இரண்டாவது ஆண்டு ரூ.19.00 லட்சமும், மூன்றாவது ஆண்டு ரூ.13.00 லட்சமும் ஆக மொத்தம் ரூ.58.50 லட்சம் நிதியுதவி மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே தர ஒப்புதல் தந்துள்ளது. மீதி செலவுத் தொகையை மாநில அரசும் மாநகராட்சிகளும் மேற்கொள்ள வேண்டும்.

3. மத்திய அரசு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கென தனியான கண்காணிப்பு மற்றும் செயல்படுத்தும் (Project Implementation Unit) குழு ஏற்படுத்த அனுமதியளிக்கவில்லை. ஆனால் சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு மற்றும் செயல்படுத்தும் (Project Implementation Unit) குழு ஏற்படுத்த ஒப்புதல் தெரிவித்துள்ளது. அக்குழுவில் வல்லுநர்கள் எண்ணிக்கையினை அதிகரிக்க மாநில அளவிலான முகமை (SLNA) கருத்துரு அனுப்பலாம் என ஆலோசனையும் தெரிவித்துள்ளது.

4. இச்சூழ்நிலையில், மத்திய அரசு வழங்கிய ஒப்புதலின்படி திட்ட செயலாக்கக் குழு பணியாளர்களையும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் பணியாளர்களையும் தொடர மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாமன்றங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. ஏற்கெனவே JNNURM திட்டத்தின் கீழ் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும், புதிதாக எடுத்துக் கொள்ளப்படவுள்ள திட்டங்களை தயாரிக்கவும், மேல்நடவடிக்கை எடுக்கவும் ஏற்படுத்தப்பட்ட திட்ட செயலாக்கக் குழுவிற்கு ஒப்பளிக்கப்பட்ட 8 பணியாளர்களைத் தவிர 44 கூடுதல் பணியிடங்கள் தேவைப்படுவதாக மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர்கள் தெரிவித்துள்ளனர். மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் தேவைப்படும் 44 கூடுதல் பணியிடங்களுக்கும் திட்ட செயலாக்கக் குழுவிற்கு ஒப்பளிக்கப்பட்ட 8 (எட்டு) பணியாளர்களுக்கும் மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரை ஆண்டொன்றுக்கு ரூ.102.83 லட்சமும் (ரூ.75.69+27.14 லட்சமும்), கோயம்புத்தூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை ரூ. 83.84 லட்சமும் (ரூ.57.55+26.29 லட்சமும்) தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த கூடுதல் செலவினத்தால் மதுரை மாநகராட்சிக்கு வருமானம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் செலவினம் அதன் வருவாயில் 49 சதவிகிதத்திற்கும் கூடுதலாகிறது (Exceeds 49% of Corporation's Revenue). கோயம்புத்தூர் மாநகராட்சியில் 49 சதவிகிதத்திற்குட்பட்டே உள்ளது. முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவதால், சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ஆகிய இனங்களில் ஏற்படும் செலவினம் அவ்வுள்ளாட்சி அமைப்பின் வருவாயில் 49 சதவிகிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

5. ஐந்தாவதாகவும், ஆறாவதாகவும் படிக்கப்பட்ட கடிதங்களில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் அனுப்பிய செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து

...3

கீழ்கண்ட ஆணைகளை பிறப்பிக்கின்றது:-

(1) 26-06-2007 நாளிட்ட, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி2) துறை, அரசாணை (2டி) எண்.105-ல் JNNURM திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்கநரகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 9 (ஒன்பது) பணியிடங்கள் 25-06-2009 அன்று காலாவதியான பிறகும் தொடர்ந்ததற்கு பின்னேற்பு வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஆணைப்படி ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் புள்ளி விவர குறிப்பாளர் (கணினி) பணியிடம் தவிர ஏனைய 8 (எட்டு) பணியிடங்கள் 25-06-2009 முதல் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகின்றன. அப்பணியாளர்களை கண்காணிப்பு மற்றும் செயல்படுத்தும் குழுவிற்கு பணிமாற்றம் செய்யவும் கூடுதல் சம்பளச் செலவு ஏற்படின் அதை TNUDP-III நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அனுமதி வழங்கப்படுகிறது.

(2) 26-06-2007 நாளிட்ட, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி2) துறை, அரசாணை (2டி) எண்.105-ல் JNNURM திட்டத்திற்காக மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 25-06-2009 அன்று காலாவதியான பிறகும் தொடர்ந்ததற்கு பின்னேற்பு வழங்கப்படுகிறது.

(3) மத்திய ஒப்பளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (Central Sanctioning and Monitoring Committee, Government of India) கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் 8 (எட்டு) பணியிடங்கள் கொண்ட திட்ட செயலாக்கக் குழுக்கள் (Project Implementation Units) ஏற்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது.

(4) தற்போது JNNURM திட்டத்தின் கீழ் 26-06-2007 நாளிட்ட, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி2) துறை, அரசாணை (2டி) எண்.105-ல் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்களை புதிதாக உருவாக்கப்படும் திட்ட செயலாக்கம் மற்றும் கண்காணிப்புக் குழுவில் உள்ள பணியிடங்களை நிரப்ப மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கல்.

(5) மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் திட்ட செயலாக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட 52 பணியிடங்களில் திட்ட செயலாக்கம் மற்றும் கண்காணிப்புக் குழுவிற்கு (PIU) மாற்றம் செய்யப்படும் 8 (எட்டு) பணியிடங்கள் தவிர 44 கூடுதல் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பும் நீட்டிப்பும் வழங்கப்படுகிறது.

(6) புதிதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்களை தொடர்வது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆறுமாதங்களுக்கொருமுறை சீராய்வு செய்து அவசியமான பணியிடங்களை மட்டும் தொடர்தல்

(7) திட்ட செயலாக்கக் குழுக்களுக்காக ஒப்பளிக்கப்பட்ட நிதிக்கும் (ரூ.58.50 லட்சம்) கூடுதலாக ஆகும் செலவினை (PIU-ல் உள்ள 8 வல்லுநர்கள் பணியிடங்கள் உள்ளிட்ட 52 பணியிடங்களுக்கு) மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தங்கள் பொது நிதியிலிருந்து அடுத்த மூன்றாண்டுகளுக்கு (25-06-2009-க்கு பின்னரும்) மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்படுகிறது.

...4

ITS



(8) 18-01-2007 நாளிட்ட, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, அரசாணை (பத்தாண்டு) எண்.19-ல் பணியமைப்புச் செலவு மாநகராட்சியின் மொத்த செலவுத் தொகையில் 49 சதவிகிதத்திற்கு கூடுதலாக இருக்கக்கூடாது என ஆணையிடப்பட்டதிலிருந்து விலக்களித்து மதுரை மாநகராட்சிக்கு தற்காலிகமாக பணியிடங்களை தோற்றுவித்து நிரப்ப சிறப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை 07-12-2009 நாளிட்ட, அ.சா.எண். 3443/FS/P/2009-ல் பெறப்பட்ட நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் / ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை), சென்னை-18
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை-600 108

நகல்:-

நிதித் [நநி] (ம) குவ)/ (சிஎம்.பி.சி) துறை, சென்னை-9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அநு2/நநி2) துறை, சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (இணையதளம்) துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்